## காலைக்கதிர் (22.01.2025)



புகழூர் டி.என்.பி.எல்., நிறுவனம் சார்பில், புன்னம் மற்றும் வேட்டமங்கலம் ஊராட்சிகளுக்குட் பட்ட பகுதிகளில் சமுதாயக் கூடம் மற்றும் அங்கன் வாடி மையம் கட்டுவதற்காக, ரூ.66.10 லட்சம் நிதி யுதவியை, அரவக்குறிச்சி எம்.எல்.ஏ., இளங்கோவிடம், நிறுவன பொதுமேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

# புகழூர் டி.என்.பி.எல்., சார்பில் ரூ.66 லட்சம் நிதியுதவி வழங்கல்

கரூர், ஜன. 22-

சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக, புகழூர் டி.என்.பி.எல்., நிறுவனம் ரூ.66.10 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய பஞ்., பகுதிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளை டி.என்.பி.எல்., நிறுவனம் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, புன்னம், வேட்டமங்கலம் ஆகிய பஞ்., பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாயக்கூடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக, 66.10 லட்சம் ரூபாய் காசோலையை, காகித நிறுவனத்தின் பொது மேலாளர் [மனிதவளம்] கலைச்செல்வன், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ., இளங்கோவிடம் வழங்கினார்.

**தினமணி (22.01.2025)**

# சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம் கட்ட டி.என்.பி.எல். ரூ. 66 லட்சம் நிதியுதவி

கரூர், ஜன21: கரூர் மாவட்டம், புன்னம், வேட்டமங்கலம் ஊராட்சிகளில் சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ.66.10லட்ம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புன்னம் ஊராட்சி மற்றும் வேட்டமங்கலம் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக சமுதாயக் கூடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக ரூ.66.10 லட்சம் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி ஆலை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், நிதிக்கான காசோலையை அரவக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.இளங்கோவிடம் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் வழங்கினார். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



வேட்டமங்கலத்தில் அங்கன்வாடி மையம், சமுதாயக்கூடம் கட்டுவதற்காக நிதியுதவி காசோலையை அரவக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். இளங்கோவிடம் செவ்வாய்க்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன்.

தினமலர் (22.01.2025)

# அங்கன்வாடி மையம் கட்ட ரூ. 66 லட்சம்

## அள்ளித்தந்தது டிஎன்பிஎல்

**வேலாயுதம்பாளையம், ஜன. 22–**

*தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் புன்னம் மற்றும் வேட் டமங்கலம் ஊராட்சி களில் சமுதாய கூடம், அங்கன்வாடி மையம் கட்ட ரூ.66.10 லட்சம் நிதி வழங்கி உள்ளது.*

தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் தனது சமுதாய மேம்பாட் டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந் துள்ள புகளூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக் காடுதுறை, வேட்டமங்க லம், புன்னம், கோம்புபா ளையம், நஞ்சை புகளூர் ஆகிய ஊராட்சி பகுதி களின் உட்கட்டமைப் பினை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் மற்றும் நிதி உதவிகளைச் செய்து வருகிறது.

அதன் ஒருபகுதியாக புன்னம் மற்றும் வேட்ட மங்கலம் பகுதிகளில் பொதுமக்களின் பயன் பாட்டிற்காக சமுதாய கூடம், அங்கன்வாடி மையம் கட்ட ரூ.66 லட் சத்து 10 ஆயிரம் நிதி வழங்கி உள்ளது. காகித ஆலையில் நடந்த நிகழ்ச் சியில் அதற்கான காசோ லையை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல் வன் அரவக்குறிச்சி எம் எல்ஏ இளங்கோவிடம் வழங்கினார். இதில் காகித ஆலை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் புன்னம் மற்றும் வேட்டமங்கலம் ஊராட்சிகளில் சமுதாய கூடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்ட ரூ.66.10 லட்சம் நிதிக்கான காசோலையை அதன் பொதுமேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் எம்எல்ஏ இளங்கோவிடம் வழங்கினார்.

இந்து தமிழ் திசை (23.01.2025)



புகழூர் டிஎன்பிஎல் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.66.10 லட்சத்துக்கான காசோலையை எம்எல்ஏ ரா.இளங்கோவிடம் வழங்கிய நிறுவன பொது மேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன்.

### டிஎன்பிஎல் சார்பில்

# சமுதாயக்கூடம், அங்கன்வாடி மையம் கட்ட ரூ.66.10 லட்சம் நிதியுதவி

கரூர்

புன்னம், வேட்டமங்கலம் ஊராட்சிகளில் சமுதாயக்கூடம், அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்ட டிஎன்பிஎல் சார்பில் ரூ.66.10 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகழூரில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்(டிஎன்பிஎல்) தனது சமூக மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் காகித ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளை செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, டிஎன்பிஎல் நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில், புன்னம் மற்றும் வேட்டமங்கலம் ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக சமுதாயக் கூடம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ.66.10 லட்சத்துக்கான காசோலையை அரவக்குறிச்சி எம்எல்ஏ ரா.இளங்கோவிடம் டிஎன்பிஎல் நிறுவன பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் வழங்கினார்.

## தினத்தந்தி (23.01.2025)



காகித ஆலை நிறுவனம் சார்பில்

# புன்னம்-வேட்டமங்கலம் ஊராட்சிகளுக்கு ரூ.66 லட்சம் நிதி உதவி

நொய்யல், ஜன.23-


புகளூரில் உள்ள காகித ஆலை சமூகமேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் புகளூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்பு பாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, புன்னம், வேட்டமங்கலம் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாயக் கூடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக ரூ.66 லட்சத்து 10 ஆயிரத்திற்கான காசோலையை காகித ஆலை நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. இளங்கோவிடம் வழங்கினார். அப்போது காகித ஆலை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மாலை மலர்

MAALAI MALAR

22-1-2025 (புதன்கிழமை)

22-1-2025 (WEDNESDAY)



ரூ.66.10 லட்சத்திற்கான காசோலையை அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. .சு.இளங்கோவிடம் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) மு.கலைச்செல்வன் வழங்கிய காட்சி.

## செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் ரூ.66.10 லட்சத்திற்கான காசோலை வழங்கல்

வேலாயுதம்பாளையம், ஜன.22—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைறதுள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்ட மங்கலம், புன்னம், கோம்பு பாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்க ட்ட மைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அருகில் உள்ள புன்னம் ஊராட்சி மற்றும் வேட்ட மங்கலம் ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாயக் கூடம் மற்றும் அங்கன்வாடி மையம் கட்டுவதற்காக ரூ.66.10 லட்சத்துக்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்த காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) மு.கலைச்செல்வன், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. .சு. இளங்கோவிடம் வழங்கினார்.